## ஆணவ – அதிகார ஒன்றிய அரசிற்கு கடிவாளப் பிடி – தமிழ்நாட்டின் உரிமைக்குரல்– தலைமைக் குரல், எம் மக்கள் முதல்வர் – மாண்புமிகு தளபதி!

# எங்கள் முதல்வர் போடுவதுதான் நியாயக் கணக்கு! சத்தியக் கணக்கு! வெற்றிக் கணக்கு!

## சட்டப்பேரவையில் – போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் – அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பெருமிதம்!

சென்னை, ஏப்.24-

**சட்டப்பேரவையில் நேற்று, போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், "ஆணவ - அதிகார ஒன்றிய அரசின் கடிவாளப் பிடி, தமிழ்நாட்டின் உரிமைக் குரல், எம் மக்கள் முதல்வர் மாண்புமிகு தளபதி அவர்கள்! என்றும், "எங்கள் முதல்வர் போடுவதுதான் நியாயக் கணக்கு! சத்தியக் கணக்கு! வெற்றிக் கணக்கு! என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அளித்த பதிலுரை வருமாறு:

பேரவைத் தலைவர் அவர்களே, தில்லி எலிக்கு வான் பருந்து; தெற்குத் திசையின் படை மருந்து; கல்லாதோர்க்கு நன்மருந்து; கற்றவர்க்கு வண்ணச் சிந்து பெரியார் என்றார் பாரதிதாசன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பெரியாருக்கு புகழ் வணக்கம். எதிரிகள் தாக்கித் தாக்கி தங்கள் வலுவை இழக்கட்டும்; நீங்கள் தாங்கித் தாங்கி அந்த வலுவைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்றார் பேரறிஞர் அண்ணா. (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றிய அரசு, தமிழக அரசின்மீது தாக்குதல் தொடுத்து தொடுத்து நமது முதல்வர் அவர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அந்த தீர்க்கதரிசி அண்ணாவிற்கு புகழ் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) 13 வயதில் மொழி காக்க புறப்பட்டு, மாநில சுயாட்சிக்கு வலுவான தளமிட்டு, நவீன தமிழகத்தைக் கட்டமைத்து, வாழும்வரை தம் எழுத்துகளால் தமிழைச் செறிவூட்டி, இனமான உணர்வூட்டிய எம் தலைவர் கலைஞருக்கு புகழ் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

காஷ்மீர் உரிமைக்கான முதல் குரல்; விவசாயிகள் போராட்டத்திற்கு ஆதரவு குரல்; பிரிவினையைத் தூண்டிய குடியுரிமைச் சட்டத்திற்கு எதிர் குரல்; ஏஜெண்ட் ஆளுநரின் அசட்டுத்தனத்திற்கு சம்மட்டி அடி; ஆணவ அதிகார ஒன்றிய அரசிற்கு கடிவாளப் பிடி; மொத்தத்தில் தமிழ்நாட்டின் உரிமைக் குரல் தலைமைக் குரல் எம் மக்கள் முதல்வர் தளபதி அவர்களுக்கு கம்பீர வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

நீட் எதிர்ப்பில் முதல் சிப்பாய்; ஒன்றிய அரசிற்கு எதிரான கள வீரன்; இளைஞர் படைக்கு தெளிவூட்டும் பாசறை ஆசான்; விளையாட்டு வீரர்களுக்கு வாழ்க்கைப் பாலம்; தமிழக மக்களின் செல்லப் பிள்ளை எங்கள் இளைஞரணிச் செயலாளர் துணை முதல்வர் அவர்களுக்கு மகிழ் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

### அமெரிக்காவில் நடைபெற்ற சம்பவம்!

இந்தத் துறை குறித்த ஒரு வரலாற்றுச் செய்தியை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். 1955 ஆம் ஆண்டு, அமெரிக்காவில் இதுபோன்ற பொதுப் போக்குவரத்தில் ரோசா பார்க் என்ற பெண்மணி பேருந்தில் ஒருநாள் பயணம் செய்தபோது, அவர் அமர்ந்திருந்த இருக்கையை விட்டுக்கொடுக்குமாறு நடத்துநர் சொல்கிறார். அந்தப் பெண்மணி கருப்புப் பெண்மணி. காரணம் கேட்டபோது, ஒரு வெள்ளையர் வந்து நிற்கிறார், அவருக்கு அந்த இருக்கையை விட்டுத்தர வேண்டுமென்று சொல்கிறார். அந்தப் பெண்மணி மறுக்கிறார். மறுத்த அந்த பெண்மணிமீது வழக்கு தொடுக்கப்பட்டு, கைது செய்யப்படுகிறார். ஓர் இருக்கையில் அமர்வதற்குக்கூட அந்த கருப்பினப் பெண்மணிக்கு உரிமை இல்லை என்று மறுக்கப்பட்ட நேரத்தில், அதையொட்டி ஒரு பெரும் போராட்டம் வெடித்தது. அமெரிக்க அலபாமா மாநிலம் முழுவதும் அந்தப் பெரும் போராட்டத்திற்கு வலு சேர்ந்து, அந்தப் போராட்டத்தின் இறுதியில், அவரும் அமர்ந்து பயணம் செய்யலாம் என்று நீதிமன்றம் தீர்ப்பு வருகிறது. பொதுப் போக்குவரத்தின் இந்த மிகப் பெரும் வரலாறு அமெரிக்காவில் துவங்குவதற்கு முன்பே, அதற்கு கால் நூற்றாண்டிற்கும் முன்பாகவே தமிழகத்தில் இதேபோன்று ஒரு சம்பவம் நடைபெற்றது.

### பேருந்தில் உட்கார்ந்து பயணம் செய்யும் உரிமை!

தமிழகத்திலும் அதேபோன்று ஒரு பேருந்தில் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் உட்கார்ந்து பயணம் செய்தார். அன்றைக்கு இருந்தவை அனைத்தும் தனியார் பேருந்துகள். அந்த தனியார் பேருந்து முதலாளிகளின் உத்தரவுப்படி, அவ்வாறு உட்கார்ந்து பயணம் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். அவ்வாறு உட்கார்ந்து பயணம் செய்ய அனுமதிக்கவில்லை என்றால், அந்தப் பேருந்தின் உரிமம் பறிக்கப்படும் என்று அன்றைக்கு ஒரு தலைவர் சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் W.P.A. சௌந்தரபாண்டியன் அவர்கள். அவர்தான் நீதிக் கட்சியின் தலைவர். அந்தத் நீதிக் கட்சியின் தலைவர் W.P.A. சௌந்தரபாண்டியன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைப்பதற்குத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில் அறிவிப்புக் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்தப் பொதுப் போக்குவரத்தில் அன்றைக்கு எல்லோரும் அமர்ந்து பயணிக்க வேண்டுமென்ற அந்த நீதிக் கட்சியின் குரலாகத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன், தனியார் பேருந்துகளை நாட்டுடைமையாக்குவதற்கு உத்தரவிட்டார்கள். அவ்வாறு உத்தரவிட்ட நேரத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்து, அந்தப்பணியை முடுக்கி, முதலமைச்சரான பிறகு முழுமையாக நாட்டுடைமையாக்கி, தற்போது இவ்வளவு பெரிய போக்குவரத்து நிறுவனம் அமைவதற்குக் காரணமாக இருந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி அமைந்த காரணத்தினால்தான், தமிழகத்தில் ஏற்றத்தாழ்வுகள் நீங்குவதற்கு ஒரு பெரும் சக்தியாக இந்தப் போக்குவரத்துத் துறை அமைந்தது. இந்தப் போக்குவரத்துத் துறை இவ்வளவு பெரிய நிறுவனமாக வளர்ந்த காரணத்தினால்தான், தமிழகத்தில் கிராமம், நகரம் என்ற பாகுபாடில்லாமல் ஒரு சமச்சீர் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த சமச்சீர் வளர்ச்சிக்கு வித்திட்டவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

### சமச்சீர் வளர்ச்சியை கட்டமைத்தவர் கலைஞர்!

1970-ல் முதலமைச்சராக இருந்த நேரத்தில், எவ்வாறு எல்லா கிராமங்களும் மின் வசதி பெறுவதற்கும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெறுவதற்கும் காரணமாக இருந்தாரோ, அவ்வாறு எல்லா கிராமங்களையும் சாலைகளால் இணைத்தார்.

அந்தச் சாலைகளால் இணைத்தால் மட்டும் போதாது. அந்தச் சாலைகளுக்குப் பேருந்து வசதி கொடுத்தால்தான் கிராமம், நகரம் என்கின்ற பாகுபாடு மறையும் என்று இந்தப் பொதுப் போக்குவரத்தை விரிவுபடுத்தி, ஒரு மிகப் பெரிய நிறுவனமாக கட்டமைத்த காரணத்தினால்தான் தமிழகம் இன்றைக்கு அந்தச் சமச்சீர் வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. வெறும் போக்குவரத்து மட்டும் சமச்சீர் வளர்ச்சியைக் கொண்டுவந்துவிட முடியுமா என்று பலரும் கேட்பார்கள். அப்படி அவர் கொண்டு வந்த காரணத்தினால்தான் கிராமங்களில் வீதிகளில், வீடுகளில் முடங்கிக்கிடந்த பொதுமக்கள் அந்தப் போக்குவரத்தின் மூலமாக வெளியே வந்து கல்வி கற்றார்கள்; சிறு வேலைகளுக்குச் செல்லக்கூடிய வாய்ப்பைப் பெற்றார்கள். சிறு வியாபாரம் செய்கின்ற வாய்ப்பைப் பெற்றார்கள். அதன் மூலமாகத்தான் இந்த வளர்ச்சி கிடைத்தது.



### கலைஞர் ஏற்படுத்திய மாபெரும் புரட்சி!

சமீபத்திலேகூட அண்ணா நூற்றாண்டு நூலகத்திலே போதுமான போக்குவரத்து வசதிகளை இன்னும் கூடுதலாக்க வேண்டுமென்று நம்முடைய மாநில திட்டக் குழுத் துணைத் தலைவர் மரியாதைக்குரிய மரு. ஜெ. ஜெயரஞ்சன் அவர்கள் என்னிடத்திலே தெரிவித்தார். அவர் அங்கே சென்றிருந்த நேரத்தில் பார்த்தபோது-அதற்குப் பிறகு 44 service-கள் கூடுதலாக்கப் பட்டது. அப்படிக் கூடுதலாக்கப்பட்ட காரணத்தினால் ஒவ்வொரு நாளும் 1,800 பேர் வந்து கொண்டிருந்தார்கள் என்ற நிலை மாறி, இன்றைக்கு இரண்டு மடங்காக அங்கே வாசகர்கள் வருகிறார்கள் என்று அண்ணா நூற்றாண்டு நூலகத்திலே பணியில் இருக்கின்ற அதிகாரிகள் நம்முடைய போக்குவரத்துத் துறைக்கு நன்றி தெரிவித்து கடிதம் எழுதியிருக்கிறார்கள். இவ்வளவு முன்னேறிய சூழல் வந்தபிறகும், போக்குவரத்து வசதிகள் பெருகிய பிறகும், அந்தப் பொதுப் போக்குவரத்தை இன்னும் கூடுதலாக்குகின்றபோது எவ்வளவு பெரிய வாய்ப்பு கிடைக்கிறது என்பதனை இன்றைக்கு அண்ணா நூற்றாண்டு நூலகத்தினுடைய உதாரணம் நமக்குத் தெரிவிக்கிறது. எனவே, ஒரு பெரிய மாநகரத்திலேயே இத்தகைய வசதி கிடைக்கின்றபோது இவ்வளவு வசதியைப் பயன்படுத்தி மக்கள் வருகிறார்கள் என்றால், கிராமப்புறத்திற்கும் அந்த வசதிகளை தலைவர் கலைஞர் அவர்கள் கொடுத்த காரணத்தினால்தான் ஒரு மாபெரும் புரட்சி இன்றைக்குத் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது.

## ‘விடியல் பயணம்’ திட்டம் மூலம், கடந்த 4 ஆண்டுகளில் 675 கோடியே 9.8 லட்சம் பேர் பயணம் செய்துள்ளார்கள்!

### 675 கோடியே 98 லட்சம் பேர் விடியல் பயணம்!

அந்த மாபெரும் புரட்சியை நம்முடைய முதல்வர் அவர்கள் விடியல் பயணத்தின் மூலமாக இன்றைக்கு இன்னும் கூர்மை தீட்டியிருக்கின்றார். இந்த விடியல் பயணம் வழங்குகின்ற நேரத்தில் 2021 மே மாதம் ஆட்சி அமைந்த 7 ஆம் தேதி அவர் அறிவித்து, இன்றைக்கு 4 ஆண்டுகள் நிறைவு பெறுகின்ற வேளையிலே, இந்த விடியல் பயணம் திட்டத்தின்கீழ் பயணம் செய்தவர்கள் 675 கோடியே 98 இலட்சம் பேர். (மேசையைத் தட்டும் ஒலி) நாம் நினைத்துக்கூட பார்க்க முடியாத எண்ணிக்கையில் இன்றைக்குப் பெண்கள் இந்தத் திட்டத்தின்கீழ் பயணம் செய்திருக்கிறார்கள் என்றால், அவர்களுடைய வாழ்க்கையிலே மிகப்பெரிய மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. மாநில திட்டக் குழு ஆய்வு நடத்தி, கடந்த ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் ஒவ்வொரு பெண்மணிக்கும் 888 ரூபாய் இந்தத் திட்டத்தின் மூலமாக மிச்சமாகிறது, அந்தத் தொகை அவர்களுடைய குடும்பத்தினுடைய வளர்ச்சிக்குப் பயன்படுகிறது என்று சொன்னார்கள். இப்போது கிட்டத்தட்ட 1,200 ரூபாய் அவர்களுக்கு மிச்சமாகிறது என்று ஒரு தனியார் நிறுவனத்தின் கணிப்பு மூலமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தத் திட்டத்திற்கு முதல்வர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்குகின்ற நிதி உயர்ந்து கொண்டே செல்கிறது. 2021-2022 ஆம் ஆண்டு 1,216 கோடி ரூபாயை ஒதுக்கினார். 2022-2023 ஆம் ஆண்டு 2,728 கோடி ரூபாயை ஒதுக்கினார். 2023-2024 ஆம் ஆண்டு 3,000 கோடி ரூபாயை ஒதுக்கினார். 2024-2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை 3,215 கோடி ரூபாய் நிதி இதற்காக வந்துள்ளது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வருகின்ற நிதியாண்டிற்கு 3,600 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்றார். ஒதுக்குகின்ற ஒவ்வொரு தொகையும் தமிழ்நாட்டுப் பெண்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான தொகையாக இருக்கிறது.

### புதிய பேருந்துகள் வாங்க உத்தரவு!

அதேபோல, போக்குவரத்துத் துறையினுடைய செயல்பாடு சிறப்பாக அமைவதற்கு மிகப்பெரிய ஆதாரமாக இந்தத் தொகைதான் அமைந்திருக்கிறது. எனவே, முதலமைச்சர் அவர்களுக்கு இந்தத் துறை சார்பாக இந்த நேரத்தில் எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதேபோல, பாழ்பட்டுக் கிடந்த, சீர்கெட்டுக் கிடந்த இந்தத் துறையை சீரமைப்பதற்கு புதிய பேருந்துகள் வாங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். 2022-2023 ஆம் ஆண்டு 420 கோடி ரூபாயை ஒதுக்கி ஆயிரம் பேருந்துகள் வாங்குவதற்கு உத்தரவிட்டார்கள். ஆயிரம் பேருந்துகளும் மக்கள் பயன்பாட்டிற்கு வந்துவிட்டது. 2023-2024 ஆம் ஆண்டு 446 கோடி ரூபாயை ஒதுக்கி ஆயிரம் பேருந்துகள் வாங்குவதற்கு உத்தரவிட்டார்கள். ஆயிரம் பேருந்துகளும் மக்கள் பயன்பாட்டிற்கு வந்துவிட்டது. 2024-2025 ஆம் ஆண்டு 1,535.89 கோடி ரூபாயை ஒதுக்கி 3 ஆயிரம் பேருந்துகள் வாங்குவதற்கு உத்தரவிட்டார்கள். அதிலே 1,210 பேருந்துகள் மக்கள் பயன்பாட்டிற்கு வந்துவிட்டது.

அதேபோல, ஜெர்மன் வங்கியான KfW நிதியுதவிடன் 552 தாழ்தளப் பேருந்துகள் வாங்குவதற்கு உத்தரவிடப்பட்டு, அந்த 552 பேருந்துகளும் மக்கள் பயன்பாட்டிற்கு வந்துவிட்டது. KfW மூலமாக 1,214 சாதாரண டீசல் பேருந்துகள் வாங்குவதற்கு

7-10-2024 அன்று tender விடப்பட்டு, விரைவிலே அந்தப் பேருந்துகள் மக்கள் பயன்பாட்டிற்கு வர இருக்கின்றன. அதேபோல, KfW வங்கியின் மூலமாக 500 மின்சாரப் பேருந்துகள் வாங்குவதற்கு 11-10-2024 அன்று tender விடப்பட்டு அந்தப் பேருந்துகளும் மக்கள் பயன்பாட்டிற்கு வர இருக்கின்றன.

உலக வங்கி நிதியுதவியுடன் சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கு ஒப்பந்த அடிப்படையில், GCC method அடிப்படையில் பேருந்துகள் வாங்குவதற்கு ஆணையிடப்பட்டு, 26-2-2024 அன்று 635 பேருந்துகள் முதற்கட்டமாக வாங்கப்பட்டன. வருகின்ற ஜூலை மாதத்தில் அந்தப் பேருந்துகள் சென்னையில் அறிமுகப்படுத்தப் பட உள்ளன. அடுத்து, 11-2-2025 அன்று 600 பேருந்துகளுக்கு tender விடப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல், இந்த 2025-2026 ஆம் ஆண்டிற்கு 3,000 புதிய பேருந்துகளைக் கொள்முதல் செய்வதற்கு முதல்வர் அவர்களால் உத்தரவிடப்பட்டு, அதுவும் தற்போது tender நிலையில் இருக்கிறது. விரைவில் அப்பணி முடிவுற்று பேருந்துகள் பயன்பாட்டிற்கு வரவிருக்கின்றன.

இவ்வாறு, கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு வரை மொத்தம், 3,778 பேருந்துகள் மக்கள் பயன்பாட்டிற்கு வந்திருக்கின்றன. மீதி 8,129 பேருந்துகள் மக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டுவரப்பட உள்ளன.

அதுமட்டுமின்றி, அடித்தட்டம் சரியாக இருக்கின்ற, நல்ல நிலையில் இயங்கக்கூடிய பேருந்துகளை அவற்றின் கூடுகளை மறுசீரமைப்புசெய்து கட்டுவதற்கு 2022-2023 ஆம் ஆண்டில் 130 கோடி ரூபாயை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். அதில் 1,000 பேருந்துகள் கூடு கட்டப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு வந்துவிட்டன. 2023-2024 ஆம் ஆண்டில் 500 பேருந்துகளுக்கு கூடு கட்டுவதற்கு முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டு, அந்தப் பேருந்துகளும் மக்கள் பயன்பாட்டுக்கு வந்துவிட்டன. இந்த 2025-2026 ஆம் ஆண்டில் 754 புதிய பேருந்துகளுக்கு கூடு கட்டுவதற்கு tender விடப்பட்டிருக்கிறது.

- ‘நீட்’ எதிர்ப்பில் முதல் சிப்பாய்!
- ஒன்றிய அரசுக்கு எதிரான கள வீரன்!
- இளைஞர் படைக்குத் தெளிவூட்டும் ஆசான்!
- விளையாட்டு வீரர்களுக்கு வாழ்க்கைப் பாலம்!
- தமிழ்நாட்டு மக்களின் செல்லப் பிள்ளை, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்!

அதுமட்டுமின்றி, காற்று மாசுபடுவதைத் தடுப்பதற்கு CNG என்கின்ற இயற்கை வாயு அடிப்படையிலான புதிய பேருந்துகளை இயக்குவதற்கும் முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். 746 புதிய பேருந்துகளை வாங்குவதற்கு tender விடப்பட்டுள்ளது. அதேபோல, ஏற்கெனவே இயங்குகின்ற பேருந்துகளில் 1,000 பேருந்துகளை CNG பேருந்துகளாக மாற்றி இயக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### புதிய பணியாளர்கள்!

இவ்வாறு புதிய பேருந்துகளை வாங்குகின்ற இந்த நேரத்தில், புதிய பணியாளர்களைப் பணிக்கு எடுக்க வேண்டுமென்று, அது தொடர்பான நடவடிக்கைகளுக்கும் முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இங்கே பேசிய உறுப்பினர் P.R.G. அருண்குமார் மற்றும் நண்பர்கள் அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். முதற்கட்டமாக, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 685 பேர் கடந்த ஆண்டே பணிக்கு எடுக்கப்பட்டுவிட்டார்கள். அதேபோன்று, மற்ற 7 போக்குவரத்துக் கழகங்களுக்கும் 3,275 நபர்களை பணிக்கு எடுப்பதற்கு

online-ல் விண்ணப்பம் பெறுகின்ற பணி துவங்கப்பட்டு, இன்று அந்தப் பணி முடிகிறது.

அந்தப் பணியிடங்களுக்கு ஆட்களை எடுக்கின்ற நேரத்தில், ஓட்டுநர் மற்றும் நடத்துனராக எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த முறையை மாற்ற வேண்டுமென்று திருத்தணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் S. சந்திரன் அவர்கள் கோரிக்கை வைத்தார். இவ்வாறு பணிக்கு ஆட்களை எடுப்பதற்கு என்ன காரணம் என்பதை விளக்குவதற்கு நான் இந்த நேரத்தில் கடமைப்பட்டிருக்கிறேன். ஓட்டுநர் தனியாக, நடத்துநர் தனியாக என்று எடுக்கின்ற சூழலில், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றுகின்ற ஓட்டுநர்கள், நடத்துனர்கள் திடீரென்று பணிக்கு வராமல் போய்விட்டால் ஒரு மிகப்பெரிய சிக்கல் ஏற்படுகிறது. சில நேரங்களில் 5 ஓட்டுநர்கள் வராவிட்டால், 5 பேருந்துகளை இயக்க முடியாத நிலையும், 5 நடத்துநர்களுக்கு பணி கொடுக்க முடியாத நிலையும் ஏற்படுகிறது. இதன் காரணமாகத்தான், இந்த முறை மட்டும், ஒரு மாற்று ஏற்பாடாக ஓட்டுநர் மற்றும் நடத்துநர் என்ற முறையில் எடுக்கப்படுகிறது. ஏற்கெனவே அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் இந்த அடிப்படையில்தான் பணிக்கு எடுக்கப்படுகிறார்கள். காரணம், நீண்ட தூரப் பயணத்தில் பாதி தொலைவிற்கு ஓர் ஓட்டுநர் ஓட்டியபிறகு, அடுத்து மறு ஓட்டுநர் மாற்றி ஓட்டுவார். இப்பொழுது மற்ற போக்குவரத்துக் கழகங்களுக்கும் அவ்வாறு எடுக்கின்ற காரணம், 5 ஓட்டுநர்கள் வராவிட்டால், ஓட்டுநர்-நடத்துநராக பணிக்கு எடுக்கப்படும் இவர்கள் அந்த இடங்களில் ஓட்டுநராகப் பணியாற்றுவார்கள். நடத்துநர் வராவிட்டால், அவர்களுக்கு நடத்துநருக்கான பணியை மாற்றிக் கொடுத்து, பணியாற்றுகின்ற வாய்ப்பு ஏற்படுகின்றபோது, பொதுமக்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் அனைத்துப் பேருந்துகளையும் இயக்கக்கூடிய வாய்ப்பு கிடைக்கும். எனவே, பொதுமக்களின் நலன் கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த முறை, ஓட்டுநர்-நடத்துனர் பணியிடங்களுக்கு எடுக்கின்றபொழுது தனித்தனியாகவே எடுக்கப்படும் என்ற செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, வாரிசுதாரர்களுக்கு பணி நியமனம் வழங்க வேண்டுமென்று நம்முடைய பொதுவுடைமைக் கட்சித் தோழர்கள் பல நேரங்களில் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபின்புதான், பணிக்காலத்தில் இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமனம் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டு, அதற்கு நடவடிக்கைகள் துவங்கப்பட்டு, இதுவரை 1,024 நபர்களுக்கு பணியாணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதில் 76 பேர் பெண் நடத்துனர்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இன்னும் ஒரு முக்கியமான செய்தி. பணிக்காலத்தில் இறந்தவர்களின் வாரிசுதாரர்களில், பெண்கள் நடத்துனர் பணிக்கு வருகின்றபோது, 160 centimeter உயரம் இருந்தால்தான் அவர்களுக்குப் பணி வழங்கப்பட்டது. பல பெண்கள் உயரம் குறைவாக இருக்கின்ற காரணத்தால், அந்தப் பணிகளை அவர்களுக்கு வழங்க முடியாத நிலை இருந்தது. எனவே, இந்தச் செய்தியை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன், அவர் அதனைக் கருணைகூர்ந்து கவனித்து, உடனடியாக 10 cm உயரம் குறைவாக இருந்தாலும், அதாவது 150 cm உயரம் இருந்தாலும் அவர்களுக்குப் பணி வழங்கலாம் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற வாய்ப்பை வழங்கிய காரணத்தினால், 67 பெண் நடத்துனர்களுக்கு பணியாணை வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 67 குடும்பங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

## ‘மே’ மாதம் – முதல்வர் மு.க.ஸ்டாலின் – 1842 புதிய மினி பேருந்துகளை கொடி அசைத்து தொடங்கி வைக்கிறார்!

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்